Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, AUGUST 29, 2025

வெள்ளிக்கிழமை 29, ஒகஸ்ட் 2025 | ஒளி: 11 கதிர் 039 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

பாடசாலை பாடத்தில்

## ‘ஆணுறை’



இலங்கையின் பாடசாலை பாடத்திட்டத்தில் ஆணுறை பயன்பாடு, முன்-வெளிப்பாடு தடுப்பு (PrEP), மற்றும் பிந்தைய-வெளிப்பாடு தடுப்பு (PEP) உள்ளிட்ட HIV/STI தடுப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க சுகாதார அமைச்சின் தேசிய STD/AIDS கட்டுப்பாட்டுத் திட்டம் பரிந்துரைத்துள்ளது.

தொடர்ச்சி P2



## நாயை தூக்கி கீழே அடித்து ஆற்றில் வீசிய இளைஞன்

**எஸ். சதீஸ்**

சில சம்பவங்களை பார்க்கும் போது, மனிதாபிமானம் என்பது உயிரோடு இல்லை, செத்துவிட்டது என்றே நினைக்கத் தோன்றுகிறது. மனிதனுக்கு எதிராக மனிதன் செய்யும் செயல்பாடுகளை விட, வாய் பேச முடியாத ஜீவன்களான மிருகங்களுக்கு எதிராக மனிதர்களால் மேற்கொள்ளப்படும் வன்முறைகள் அதிகரித்துள்ளன.

அவ்வாறான, மிகக் கேவலமான, மனிதாபிமானம் கொண்ட மனிதர்களால் ஜீரணித்துக்கொள்ள முடியாத சம்பவமொன்று, நானுஓயாவில் இடம்பெற்றுள்ளது. இந்த சம்பவத்தை தொலைபேசியில் ஒளிப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஈனத்தனமான சம்பவம், நானுஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நானுஓயா எடின்பரோ தோட்டப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அங்கு பாலத்துக்கு மேல் நாயொன்றின் வாயையும் முன்னங் கால்களையும் இறுக்கிப் பிடித்த இளைஞன், இடுப்பு உடையும் வரை தூக்கி பாலத்தின் மீதே அடித்தான். அப்போது, மற்றொரு நாய், அந்த நாயை முகர்ந்து சுற்றி வந்தது. இரண்டு முறை தூக்கி கீழே அடித்தான். அப்போது,

வயது குறைந்த சிறுவனின் குரலும் மற்றொரு இளைஞனின் குரலும் கேட்கிறது. எனினும், எத்தனை பேர் அவ்விடத்தில் இருந்தனர் என்பது தெளிவாக தெரியவில்லை.

தொடர்ச்சி P2

ரணிலை ஹரிணி சந்தித்தாரா?

# சிசிடிவியை ஆராய கோருகிறது சிஐடி





பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை கொழும்பு தேசிய மருத்துவமனையில் சந்தித்ததாகக் கூறப்படும் சமூக ஊடகப் பதிவுகள் குறித்த விசாரணையில், தேவைப்பட்டால் கொழும்பு தேசிய மருத்துவமனையின் சி.சி.டி.வி காட்சிகளை ஆய்வு செய்ய அனுமதி வழங்க முடியும் என்று மாளிகாகந்த நீதவான் குற்றப் புலனாய்வுத் துறைக்கு (சி.ஐ.டி) வியாழக்கிழமை (28) தெரிவித்தார்.

பிரதமர் அமரசூரிய மற்றும் அவரது பாதுகாப்புப் பணியாளர்களிடமிருந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்யுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நீதவான் லோச்சனி அபேவிக்ரம உத்தரவிட்டார்.

பிரதமர் ஹரிணி அமரசூரிய, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மருத்துவமனையில் சந்தித்ததாகக் கூறும் சமூக ஊடகப் பதிவுகள் குறித்து விசாரணைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, குற்றப் புலனாய்வுப் பிரிவினர், நீதவானிடம் தெரிவித்தனர்.

விசாரணைகள் தொடர்பாக தேசிய மருத்துவமனையின் சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்யுமாறு சிஐடி விடுத்த கோரிக்கையை பரிசீலித்த பின்னர் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பிரதமர் மற்றும் அவரது பாதுகாப்பு அதிகாரிகளிடமிருந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்த பின்னர், தேவைப்பட்டால் தேசிய மருத்துவமனையின் சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்ய அனுமதி வழங்க முடியும் என்று நீதிவான் சிஐடியினரிடம் தெரிவித்தார்.

## “பட்டதாரி ஆசிரியர் தேர்வு விரைவில்”

உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நான்கு வழக்குகளின் நீதிமன்ற நடவடிக்கைகள் தற்போது இறுதி கட்டத்தில் இருப்பதால் வேலையற்ற பட்டதாரிகளை ஆசிரியர்களாக சேர்ப்பதில் தாமதம் ஏற்படுகிறது என்றும், நீதிமன்ற நடவடிக்கைகள் முடிந்தவுடன், பட்டதாரிகள் ஆசிரியர் தேர்வுக்கு விண்ணப்பிக்க அனுமதிக்கும் வகையில் வர்த்தமானி வெளியிடப்படும் என்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர், பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

வேலையற்ற பட்டதாரிகள் கூட்டு சங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர், பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரிய ஆகியோருக்கு இடையே கல்வி அமைச்சில் கலந்துரையாடல் வியாழக்கிழமை (28) நடைபெற்றது.

அமைச்சரவை ஒப்புதல் அளித்தபடி, தேவைக்கேற்ப மற்ற பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

தொடர்ச்சி P2





## கர்ப்பிணி மானை கசாப்பு செய்யவிருந்த ஐவர் கைது

கர்ப்பிணி மானொன்றை கொன்று கசாப்பு செய்யவிருந்த ஐந்து நபர்கள் துப்பாக்கி மற்றும் கூர்மையான ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டனர். இந்த சம்பவம், வில்பட்டு தேசிய பூங்காவில் புதன்கிழமை (27) இடம்பெற்றுள்ளது.

ரனோரவ மீகஸ்தெனியா பகுதியில் குக்குல்கடுவ வனவிலங்கு பீட்டு அலுவலக அதிகாரிகள் நடத்திய விரைவான சோதனையின் போது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

தொடர்ச்சி P2

கெஹல்பத்தர பத்மே உள்ளிட்ட

## 6 பேர் கைது

பாதாள உலக குழுவைச் சேர்ந்த 6 பேர் இந்தோனேசியாவின் ஜகார்த்தா நகரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவி பொலிஸ் அத்தியட்சகர் எப்.யு. வுட்லர் தெரிவித்துள்ளார்.

கெஹல்பத்தர பத்மே, கமாண்டோ சலிந்த, பெக்கோ சமன், தெம்பிலி லஹிரு மற்றும் பாணந்துறை நிலங்க உள்ளிட்ட 6 பாதாள உலக குழுவினர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் சர்வதேச பொலிஸார் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களில் பெண் ஒருவரும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. அவர்கள் அறுவரும் இரண்டொரு நாட்களில் நாட்டுக்கு அழைத்துவரப்படவுள்ளனர் என்றும் அறியமுடிகின்றது.



PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘ஆணுறை’

அதன்படி, 10 ஆம் வகுப்பு அறிவியல் பாடப்புத்தகத்தில் HIV/STI தடுப்பு நடவடிக்கைகள் தேசிய கல்வி நிறுவனம் (NIE) ஊடாக அறிமுகப்படுத்த உள்ளது

தற்போதைய பாடத்திட்டத்தில் உள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்து, மாணவர்களுக்கு வயதுக்கு ஏற்ற, அறிவை வழங்குவதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும்.

தற்போது, அறிவியல் மற்றும் சுகாதாரம் மற்றும் உடற்கல்வி பாடப்புத்தகங்கள் குறிப்பிட்ட உயிரிமருத்துவ தடுப்பு முறைகளை விவரிக்காமல், “பொறுப்பான பாலியல் நடத்தை” மூலம் HIV ஐத் தடுக்க முடியும் என்று மட்டுமே குறிப்பிடுகின்றன என்று ஆலோசகர் வெனரியாலஜிஸ்ட் டாக்டர் வினோ தர்மகுலசிங்க தெரிவித்துள்ளார்.

“ ஆணுறை ஊக்குவிப்புக் குழுவின் சமீபத்திய மதிப்பாய்வின் பிரகாரம், இந்த விவரங்கள் இல்லாதது மாணவர்களுக்கு முக்கிய தடுப்பு உத்திகள் குறித்து போதுமான அளவு தகவல்களை அளிக்கவில்லை என்பதை தேசிய எய்ட்ஸ் கவுன்சிலின் IEC வலியுறுத்தியது,” என்று அவர் கூறினார்.

2024 உலகளாவிய பாடசாலை சுகாதார கணக்கெடுப்பின் (GSHS) கண்டுபிடிப்புகள் சீர்திருத்தத்தின் அவசரத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன என்று அவர் மேலும் விளக்கினார்.

“63% மாணவர்கள் மட்டுமே HIV அல்லது AIDS பற்றி கேள்விப்பட்டதாகக் கூறினர் - 2016 இல் 77% ஆக இருந்த கூர்மையான சரிவு. இதேபோல், வகுப்பில் HIV தொற்றைத் தவிர்ப்பது எப்படி என்று கற்பிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 2016 இல் 67.1% ஆக இருந்தது, 2024 இல் வெறும் 44.2% ஆகக் குறைந்தது. பாலியல் உறவுகளில் ஈடுபட்டதாக ஒப்புக்கொண்ட மாணவர்களில் 4.6% பேர், சரியான நேரத்தில் கல்வி கற்பதற்கான அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறார்கள்.”

இந்த கவலைகளை நிவர்த்தி செய்ய, சுகாதார மேம்பாட்டு பணியகம் யுனெஸ்கோ வழிகாட்டுதல்களுடன் இணைந்து, வாழ்க்கையைக் கற்றுக்கொள்வோம் என்ற தலைப்பில் ஒரு புதிய விரிவான பாலியல் கல்வி (CSE) தொகுப்பை உருவாக்கி வருகிறது.

ஓர் உயிரியல்-உளவியல் சமூக மாதிரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த திட்டம் மாணவர்கள் நடத்தை அபாயங்களை சந்திப்பதற்கு முன்பு வயதுக்கு ஏற்ற அறிவு மற்றும் திறன்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில், பாடசாலை சுகாதாரத் திட்டங்கள் 264, STD கிளினிக்குகளால் நடத்தப்பட்டன, இது நாடு முழுவதும் 54,000 க்கும் மேற்பட்ட மாணவர்களைச் சென்றடைந்தது என்று டாக்டர் தர்மகுலசிங்க குறிப்பிட்டார். பாடத்திட்ட சீர்திருத்தத்துடன் ஆசிரியர் பயிற்சிக்கும் கல்வியமைச்சு மேலதிகமாக முன்னுரிமை அளிக்கும்.

“ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை ஆலோசகர்கள் எச்.ஐ.வி தடுப்பு உத்திகள் குறித்த முன் சேவை மற்றும் சேவையில் பயிற்சி பெற வேண்டும், இதனால் அவர்கள் நம்பிக்கையுடனும் நிலைத்தன்மையுடனும் பாடங்களை நடத்த முடியும்,” என்று அவர் மேலும் கூறினார்.

இருப்பினும், இந்த முன்னேற்றங்களுக்கு கல்வி அமைச்சு இன்னும் பதிலளிக்கவில்லை.






# நாயை தூக்கி கீழே அடித்து ஆற்றில் வீசிய இளைஞன்

எனினும், நிழல் பிரகாரம், ஒரு சிறுவனும், இளைஞனும் இருந்துள்ளனர்.

ஒரு இளைஞன்: தூக்கி அடிச்சி தூக்கி வீசி விடு தண்ணியில வீசி விடு

அப்போது, நாயை தூக்கி கீழே அடித்த இளைஞன், அந்த நாயை அல்லாக்கா தூக்கிக்கொண்டு பாலத்துக்கு நடுவே சென்றான்.

அப்போது அங்கிருந்த சிறுவன், “ஏய் பாவம்டா”

எனினும், அல்லாக்கா தூக்கிக்கொண்டு சென்ற அந்த இளைஞன், பாலத்தின் மேலிருந்து, ஆற்றில், வேகமாக தண்ணீர் ஓடும் இடத்தில் நாயை தூக்கி தலைகீழாக அடிக்கும் வகையில் வீசி விட்டான். வீசிவிட்டு, பாலத்துக்கு மறுப்பக்கம் வந்தும் பார்த்தான்.

சிறிது நேரத்துக்குப் பின்னர் பாலத்துக்கு கீழே ஓடோடி சென்ற சிறுவன், சிறு நிமிடங்களுக்கு பின்னர் மேலே ஓடி வந்துவிட்டான். அந்த நாய்க்கு என்ன நடந்தது என்பது தெரியவரவில்லை.

அயல் வீட்டாருக்கும் குறித்த இளைஞனின் குடும்பத்தாருக்கும் உள்ள பழைய விரோதம் காரணமாக இந்த வளர்ப்பு நாயை, குறித்த இளைஞன் தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக 15வயதுடைய குறித்த இளைஞன் நானுஓயா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, பொலிஸ் நிலையத்தில் வைத்து பிணை வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மிருகங்கள் சித்திரவதை சட்டத்தின் கீழ் அந்த இளைஞனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது

# “பட்டதாரி ஆசிரியர் தேர்வு விரைவில்”

ஆசிரியர் தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான வயது வரம்பை திருத்தி, வயது வரம்பை நீட்டிக்கவும், தற்போதுள்ள அனைத்து ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப உடனடியாக ஆட்சேர்ப்பு செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.

# ஜனாதிபதியின் பயண விவரங்கள் நிராகரிப்பு



ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, உள்நாட்டில் மேற்கொண்டிருந்த பயண விபரங்கள் தொடர்பிலான தகவல்களை வெளியிட ஜனாதிபதி செயலகம் மறுத்துவிட்டது. தகவல் அறியும் உரிமை (RTI) ஊடான கோரிக்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் பதிலிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜினாத் பிரேமரத்னவால் ஆகஸ்ட் 4 ஆம் திகதி கேட்கப்பட்ட கேள்விகள், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 5(1) (b)(i) இன் கீழ், ஆகஸ்ட் 27 ஆம் திகதி முறையாக நிராகரிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் பாதுகாப்புக்கு நேரடியாக தொடர்புடையதாகக் கருதப்படும் தகவல்களை வெளியிடுவதற்கு விலக்கு அளிக்கிறது என்றும் பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பதிலில், சட்டத்தின் பிரிவு 31(1) இன் கீழ் 14 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்யலாம் என்று செயலகம் விண்ணப்பதாரருக்குத் தெரிவித்துள்ளது.

# “பட்டதாரி ஆசிரியர் தேர்வு விரைவில்”

உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நான்கு வழக்குகளின் நீதிமன்ற நடவடிக்கைகள் தற்போது இறுதி கட்டத்தில் இருப்பதால் வேலையற்ற பட்டதாரிகளை ஆசிரியர்களாக சேர்ப்பதில் தாமதம் ஏற்படுகிறது என்றும், நீதிமன்ற நடவடிக்கைகள் முடிந்தவுடன், பட்டதாரிகள் ஆசிரியர் தேர்வுக்கு விண்ணப்பிக்க அனுமதிக்கும் வகையில் வர்த்தமானி வெளியிடப்படும் என்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர், பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

# கர்ப்பிணி மானை கசாப்பு செய்யவிருந்த ஐவர் கைது

ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த வனவிலங்கு அதிகாரிகள், கர்ப்பிணி மானை கொன்று கசாப்பு செய்ய ஒரு குழு தயாராகி வருவதைக் கண்டனர், அதன்படி, உடனடியாகச் செயல்பட்ட அதிகாரிகள் அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்து சந்தேக நபர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்தனர்.

வனவிலங்கு அதிகாரிகள் நடத்திய சோதனையின் போது, சம்பவம் தொடர்பாக ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். அங்கிருந்த சந்தேக நபர்களில் ஒருவர் வனவிலங்கு அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்து தப்பிச் சென்றுள்ளார்.




# “உயிர்களைக் காப்பாற்ற சவாரி இன்று ஆரம்பம்”

இலங்கை முழுவதும் தற்கொலைகளின் எண்ணிக்கையைக் குறைத்து மன ஆரோக்கியத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு ஒரு தனித்துவமான பயணத்தை 25 க்கும் மேற்பட்ட சைக்கிள் ஓட்டுநர்கள் மேற்கொள்ளவுள்ளனர்.

இது 13 நாள் பயணம் அஹுங்கல்லவில் ஆகஸ்ட் 29ஆம் திகதி ஆரம்பமாகும். 13 நகரங்கள் வழியாக சென்று 1333 கிலோமீற்றர்களை கடப்பார்கள்.

செப்டம்பர் 10 ஆம் திகதி உலக தற்கொலை தடுப்பு தினத்தன்று இந்த சைக்கிளோட்ட விழிப்புணர்வு சிறைவடையும்

இந்த அணிவகுப்பின் முக்கிய நோக்கங்களில் ஒன்று, எந்தவொரு தொலைபேசி நெட்வொர்க் மூலமாகவும் கிடைக்கும் இலவச, ரகசியமான, தொலைபேசி நெருக்கடி ஆதரவு சேவையான CCCline 1333 பற்றி இலங்கை மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

பயிற்சி பெற்ற நெருக்கடி ஆலோசகர்களால் பணியாற்றப்படும் CCCline 1333 தொலைபேசி சேவை, சர்வதேச லைஃப்லைன் அவுஸ்திரேலியா மாதிரியைப் பின்பற்றுகிறது மற்றும் மன அழுத்தம், பதற்றம் அல்லது தற்கொலை எண்ணங்களை அனுபவிக்கும் மக்களுக்கு உயர்தர உணர்ச்சி ஆதரவை வழங்குகிறது.

இலங்கையில் தற்கொலை செய்து கொள்ளும் 8 முதல் 10 பேரில் ஒவ்வொரு நாளும் சுமார் 30 பேர் தற்கொலைக்கு முயற்சிக்கின்றனர்.

“உயிர்களைக் காப்பாற்ற சவாரி” நிகழ்ச்சியின் 13 நாட்களில், CCCline குழு, சமூகக் கூட்டங்களை நடத்த உள்ளது. மனச்சோர்வைத் தூண்டும் காரணிகளை அடையாளம் காண்பது, துயரத்தை அங்கீகரிப்பது, மனச்சோர்வின் அறிகுறிகளை அங்கீகரிப்பது, தற்கொலை பற்றிய கட்டுக்கதைகளை அகற்றுவது மற்றும் பயம் அல்லது வெட்கம் இல்லாமல் உதவி பெற மக்களை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்துகின்றன.

ஒன்றாக, விழிப்புணர்வை ஏற்படுத்துவோம், மாற்றத்திற்காகப் பயணிப்போம் - மிக முக்கியமாக, உயிர்களைக் காப்பாற்றுவதற்காகப் பயணிப்போம்.



கொக்குத்தொடுவாய்

# மனிதப்புதைகுழி வழக்கு ஒத்திவைப்பு

■ சண்முகம் தவசீலன்

> இதன்போது குறித்த புதைகுழியில் மீட்கப்பட்ட சான்று பொருட்கள் தொடர்பில் உறவினர்கள் அடையாளம் காட்டுவதற்கான விளம்பரங்கள், காணாமல் போனோர் அலுவலகத்தால் ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டிருப்பதாகவும் இது தொடர்பான அறிக்கைகள் நீதிமன்றுக்கு சமர்ப்பிப்பதற்கு கால அவகாசம் தேவை என கோரப்பட்டதற்கு அமைவாக குறித்த வழக்கு நவம்பர் மாதம் 6 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைக்குழி தொடர்பான வழக்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் வியாழக்கிழமை (28) முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் வழக்கு மீண்டும் நவம்பர் மாதம் ஆறாம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது

இதன்போது குறித்த புதைகுழியில் மீட்கப்பட்ட சான்று பொருட்கள் தொடர்பில் உறவினர்கள் அடையாளம் காட்டுவதற்கான விளம்பரங்கள், காணாமல் போனோர் அலுவலகத்தால் ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டிருப்பதாகவும் இது தொடர்பான அறிக்கைகள் நீதிமன்றுக்கு சமர்ப்பிப்பதற்கு கால அவகாசம் தேவை என கோரப்பட்டதற்கு அமைவாக குறித்த வழக்கு நவம்பர் மாதம் 6 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைக்குழி அகழ்வுப்பணி நிறைவில் 52 மனித எச்சங்கள் மீட்கப்பட்டிருந்த நிலையில் அகழ்வுப்பணி நிறைவு செய்யப்பட்டிருந்தது

இதனைத் தொடர்ந்து அகழ்வுப்பணிகளில் ஈடுபட்டிருந்த பேராசிரியர் ராஜ் சோமதேவவினால் நீதிமன்றத்திற்கு முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது

அத்தோடு சட்ட வைத்திய அதிகாரிகளால் குறித்த மனித எச்சங்கள் தொடர்பில் செய்யப்பட்ட ஆய்வுகளின் இறுதி அறிக்கையும் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது

இவ்வாறான பின்னணியில் குறித்த சான்றுப் பொருட்கள் தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்களை தொடர்பு கொண்டு அது தொடர்பில் தகவல்கள் வழங்குமாறு 2025.08.03 அன்று காணாமல் போனோர் அலுவலகத்தினால் ஊடகங்களில் குறித்த விடயங்கள் வெளியிடப்பட்டு மக்களிடமிருந்து குறித்த விடயங்கள் தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்கள் தகவல் வழங்குமாறு கோரப்பட்டிருந்தது

இவ்வாறான பின்னணியில் இதனுடைய இறுதி அறிக்கைகள் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு கால அவகாசம் தேவை என்ற அடிப்படையில் குறித்த வழக்கு நவம்பர் மாதம் ஆறாம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது

# வயல் விழா









முல்லைத்தீவு விவசாய திணைக்களத்தின் தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் வழிகாட்டல் கிறிசலிஸ் நிறுவனமும் இணைந்து நடாத்திய விவசாயிகள் வயல் வியாபார பாடசாலை குழுக்களின் சிறந்த விவசாய நடைமுறைகளை பின்பற்றிய நிலக்கடலை செய்கையின் வயல் விழா நிகழ்வானது தண்டுவான் விவசாய விரிவாக்கல் பிரிவில் பழம்பாசி கிராமத்தில் திங்கட்கிழமை (25) பிற்பகல் 3 ஆரம்பிக்கப்பட்டு பிற்பகல் 6 மணி வரை நடைபெற்றது.

இதில் முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் கிருபவதி சிவதீபன் உதவி விவசாய பணிப்பாளர் மேரிஆஞ்சலா லக்சன் பாடவிதான உத்தியோகத்தர் விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தர்கள்(மாங்குளம்,தண்டுவான்) கிறிசலிஸ் நிறுவன வட மாகாண பணிப்பாளர். ம. பிரபாகரன் விவசாய வயல் வியாபாரப் பாடசாலை திட்ட முகாமையாளர் ச. தேவதாஸ் மற்றும் சிரேஸ்ட திட்ட ஒருங்கிணைப்பாளர், திட்ட இணைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் கிராமங்களான பழம்பாசி,கரடிப்பிலவு,17ம் கட்டை, ஒலுமடு மற்றும் அம்பகாமம் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் வயல் வியாபாரப் பாடசாலை குழுக்களின் சார்பில் கலந்துகொண்டனர்

குறித்த நிகழ்வில் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட கீழ்வரும் சிறந்த பயிர் செய்கை நடவெடிக்கை துண்டங்கள் பற்றி 1.பொருத்தமான நில பண்படுத்தல்

2. தரமான விதை பயன்பாடு
3. வரிசை விதைப்பு
4. பரிந்துரைக்கப்பட்ட இடைவெளி
5. விதை பரிகரணம்
6. ஜிப்சம் பயன்பாடு
7. தூவல் நீர் பாசன பயன்பாடு விவசாயம்
8. உரம் பயன்பாடு
9. ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு(IPM)
10. தரமான விதை உற்பத்தி
11. இயந்திரங்களின் பயன்பாடு

விவசாய இயந்திரங்களின் காட்சி படுத்தல் நிலக்கடலை விற்பனை பகுதி நிலக்கடலை பெறுமதி சேர் உற்பத்தி பகுதி பல்வேறு பட்ட விவசாய பயிர் செய்கை துண்டம் பயிர் சிகிச்சை மையம் மாவட்ட விவசாய பண்ணையின் நாற்றுகள் கன்றுகள் விற்பனை பகுதி என்பன காட்சிப்படுத்தப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்வின் பெரும் பகுதியை விவசாயிகள் தலைமையேற்று நடாத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. மற்றும் தமது முன்னேற்றமான அனுபவ பகிர்வையும் மேற்கொண்டு இருந்தனர். மேலும் தமது நிலக்கடலை செய்கை சம்பந்தமான எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடினர்.

இவ் விடயமானது குறித்த நிகழ்வில் கலந்து கொண்ட அதிகாரிகளின் பாராட்டை பெற்றது

செம்மணி ஆர்ப்பாட்டத்திற்கு

# “குரல் அற்றவர்களின் குரல் ஆதரவு”

■ நிதர்ஷன் வினோத்



இனப்படுகொலை சாட்சியாக காணப்படும் செம்மணியில் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டத்திற்கு குரல் அற்றவர்களின் குரல் அமைப்பு ஆதரவு தெரிவித்துள்ளது.

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டத்திற்கு தமது முழுமையான ஆதரவு இருக்கும் என தெரிவித்த, குரலற்றவர்களின் குரல் அமைப்பின் தலைவர் கோமகன் குறித்த ஆர்ப்பாட்டம் வெற்றி பெற அனைத்து தரப்பினரும் முழுமையான ஆதரவு வழங்க வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் வியாழக்கிழமை (28) இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம் தமிழ் மக்களின் உணர்வுகளுடன் கூடிய ஒரு விடயமாகும். அதன்படி ஆர்ப்பாட்டம் வலுப்பெற தமது ஆதரவு இருக்கும்.அத்துடன் ஆர்ப்பாட்டம் வெற்றி பெற அனைத்து மக்களும் ஒன்றிணைய வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். குறித்த ஆர்ப்பாட்டம் கிட்டு பூங்காவில் இருந்து ஊர்வலமாக ஆரம்பித்து செம்மணியில் பிரதான கூட்டத்துடன் நிறைவு பெறும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நியாயமான ஆர்ப்பாட்டத்தை பொது அமைப்புகளும் மக்களும் இணைந்து வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்றும் அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பஸ் மோதி விபத்து; சபை ஊழியர் பலி

■ அஸ்லம் எஸ். மௌலானா



கல்முனை மாநகர சபையில் காவலாளியாக கடமையாற்றிய 56 வயதுடைய டேவிட் பாஸ்கரன், வீதி விபத்தில் சிக்கி வியாழக்கிழமை (28) காலை உயிரிழந்துள்ளார்.

தனது இரவு நேரக் கடமையை முடித்து விட்டு, மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியூடாக மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது மருதமுனை மக்கள் மண்டபம் முன்பாக எதிரே வந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தொன்று மோதி ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

2001ஆம் ஆண்டு கல்முனை மாநகர சபையில் காவலாளியாக நிரந்தர நியமனம் பெற்ற டேவிட் பாஸ்கரன், சுமார் 24 வருட சேவையை பூர்த்தி செய்துள்ளார்.

கடமையில் பொறுப்புணர்வு மற்றும் அர்ப்பணிப்பு மிக்கவராக காணப்பட்ட இவர் கல்முனை மாநகர சபையின் சிறந்த ஊழியர் என்ற பாராட்டையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹெரோயினுடன் நால்வர் கைது

சுமார் 50 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள ஹெரோயின் போதைப்பொருளுடன் பெண் ஒருவர் உட்பட நால்வரைக் கொழும்பு குற்றவியல் பிரிவு கைது செய்துள்ளது.

முன்னதாக, மாளிகாவத்தை பகுதியில் 206 கிராம் போதைப்பொருளுடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அங்கொட பகுதியில் அமைந்துள்ள அவரின் வீட்டில் சோதனை நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது நான்கு பொதிகளில் இருந்து 3 கிலோ 784 கிராம் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதனிடையே மேலதிக விசாரணைகளின் போது கொழும்பு 14 உள்ள வீடொன்றில் இருந்து 106 கிராம் ஹெரோயின் கண்டுபிடிக்கப்பட்டதுடன் இன்னுமொரு நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தொடர் விசாரணைகளின் போது வாழைத்தோட்டம் பகுதியில் வைத்து 206 கிராம் ஹெரோயினுடன் அடுத்த சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த குற்றச்செயல்களுக்கு உதவியாக இருந்த ஒருவரையும் மாளிகாவத்தை பகுதியில் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதாகிய சந்தேகநபர்கள் நால்வரையும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# இராணுவ ஜீப் விபத்து: மூவர் காயம்

■ சுமனசிறி குணதிலக



ஹம்பந்தோட்டையிலிருந்து மொனராகலை நோக்கி பயணித்த இராணுவ ஜீப் வாகனமொன்று மொனராகலை வெல்லவாய வீதியில் உள்ள பாலாருவ பகுதியில் வைத்து வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளான சம்பவம், புதன்கிழமை (27) அன்று இடம்பெற்றது.

இதன் போது ஜீப் வண்டியில் பயணித்த ஓட்டுநர் மற்றும் இரண்டு வீரர்கள் சிறு காயங்களுக்குள்ளான நிலையில் மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஜீப் இலங்கை இராணுவத்தின் கஜபா படைப்பிரிவு, ஹம்பாந்தோட்டை முகாமைச் சேர்ந்தது என தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மொனராகலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

அன்னப்பிரசன்னம் விழாவில் கத்திக்குத்து :

# மூவருக்கு மரண தண்டனை

அன்னப்பிரசன்னம் விழாவின் போது 30 வயது இளைஞரை கத்தியால் குத்தி கொலை செய்த குற்றத்திற்காக தங்காலை மேல் நீதிமன்ற நீதிபதி உதேஷ் ரணதுங்க மூன்று பேருக்கு, மரண தண்டனை விதித்தார்.

வலஸ்முல்ல, மெதகன்கொட பகுதியில் இன்றைக்கு 14 ஆண்டுகளுக்கு முன்பு அன்னப்பிரசன்னம் விழாவின் போது ஏற்பட்ட வாக்குவாதத்தின் பின்னர் 30 வயது இளைஞரை கத்தியால் குத்தி கொலை செய்த குற்றத்திற்காக மனதுங்க சிரில், பொத்தல கமகே சாந்த குமார மற்றும் சிங்கப்புலிகே ஜெயதிலக ஆகிய மூவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

வலஸ்முல்ல, மெதகன்கொட பகுதியில் நடைபெற்ற அன்னப்பிரசன்னம் விழாவுக்கு சென்ற வலஸ்முல்ல, பன்சலகொட, பிரதீப் ஹவுஸைச் சேர்ந்த சுது ஹகுருகே இந்திக சமன் குமார, 12/01/2011 அன்று 30 வயது இளைஞரை கத்தியால் குத்தி கொலை செய்ததாக குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கைத்தொலைபேசிகள் , ஏலக்காயுடன் வந்தவர் கைது

■ டி.கே.ஜி. கபில



சுமார் 2 கோடி ரூபாய் பெறுமதியுடைய அதிநவீன கைத்தொலைபேசிகள் மற்றும் ஏலக்காயை சட்டவிரோதமாக நாட்டிற்குள் கொண்டு வந்து, கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து வெளியேற முயன்ற ஒருவர், வியாழக்கிழமை (28) கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் கொழும்பைச் சேர்ந்த 36 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

அவர் வியாழக்கிழமை (28) காலை இலங்கை ஏர்லைன்ஸ் விமானம் UL-226 மூலம் துபாயில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்துள்ளதுடன் அவரிடம் இருந்த 6 பயணப் பைகளில் இருந்து அதிநவீன கைத்தொலைபேசிகள் 165 மற்றும் 102 கிலோ கிராம் ஏலக்காய் கைப்பற்றப்பட்டுள்ளது.


1333 BIKEATHON
ride to save lives

RIDE TO SAVE LIVES
CYCLING TOUR
12TH CONSECUTIVE YEAR

CCCline இன் கட்டணமற்ற மற்றும் இரகசிய நெருக்கடி ஆதரவு சேவையான 1333 ஊடாக உள ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த

13 நாட்களில் 1333 கி.மீ சைக்கிள் சவாரி

Bikeathon ஆகஸ்ட் 29 ஆம் திகதி ஆரம்பித்து செப்டெம்பர் 10 ஆம் திகதி நிறைவடைகிறது
(உலக தற்கொலை தடுப்பு தினம்)




CALL FOR CRISIS SUPPORT
CCC FOUNDATION
courage compassion commitment
1333
WE LISTEN SUPPORT EMPOWER

13 நாட்களில் 1ஆம் நாள்
ஆகஸ்ட் 29
கொழும்பு - அஹுங்கல்ல
(115 கி.மீ)

எந்த தொலைபேசியிலிருந்தும், எந்த இடத்திலிருந்தும் 24 X 7
ஆதரவுக்கு 1333ஐ அழைக்கவும்
www.1333.lk

# விலங்குகள் மீதான பச்சாதாபத்தை ஊக்குவித்தல் அவசியம்

இலங்கையில் விலங்கு கொடுமை என்பது ஒரு குறிப்பிடத்தக்க பிரச்சனையாகும், இது வளர்ப்பு விலங்குகள் மற்றும் காட்டு விலங்குகள் இரண்டையும் பாதிக்கிறது. யானைகள் மற்றும் பசுக்கள் போன்ற விலங்குகளுக்கு கலாச்சார மற்றும் மத மரியாதை இருந்தபோதிலும், பல விலங்குகள் புறக்கணிப்பு மற்றும் துஷ்பிரயோகத்தை எதிர்கொள்கின்றன.

விலங்கு கொடுமையை நிவர்த்தி செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட சட்ட கட்டமைப்பு பலவீனமானது, காலாவதியானது மற்றும் நவீன சமூகத்தில் விலங்கு நலனில் வளர்ந்து வரும் சவால்களை நிவர்த்தி செய்ய போதுமானதாக இல்லை. இது ஒரு முக்கியமான கேள்வியை எழுப்புகிறது: இலங்கையில் விலங்கு கொடுமை தொடர்பான முக்கிய சட்டம் 1907 ஆம் ஆண்டின் விலங்குகள் மீதான வன்கொடுமை தடுப்பு கட்டளைச் சட்டம் ஆகும், இது இப்போது ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக உள்ளது. விலங்குகளை அடிப்பது, அதிகமாக வேலை வாங்குவது மற்றும் சித்திரவதை செய்வது போன்ற விலங்குகளை கொடுமைப்படுத்தும் செயல்களுக்கு இந்த சட்டம் தண்டனைகளை வழங்குகிறது.

இலங்கையின் வனவிலங்குகள் தாவரங்கள் மற்றும் விலங்கின பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் (FFPO) கீழ் ஓரளவு பாதுகாக்கப்படுகின்றன, இது சில உயிரினங்களை வேட்டையாடுதல், பிடிப்பது மற்றும் கொல்வதைத் தடை செய்கிறது. அழிந்து வரும் விலங்குகளைப் பாதுகாப்பதில் இந்தச் சட்டம் பங்களித்திருந்தாலும், அமலாக்கம் ஒரு பெரிய சவாலாகவே உள்ளது.

இலங்கை கலாச்சாரம் மற்றும் மதத்தில் சிறப்பு இடத்தைப் பிடிக்கும் யானைகள், பெரும்பாலும் மனித-வனவிலங்கு மோதல், சுற்றுலாவுக்காக சட்டவிரோதமாக பிடிப்பது மற்றும் கலாச்சார விழாக்களின் போது தவறாக நடத்தப்படுதல் ஆகியவற்றால் பாதிக்கப்படுகின்றன.

தெருவில் திரியும் விலங்குகள், குறிப்பாக நாய்கள் மற்றும் பூனைகள் மற்றொரு பெரிய பிரச்சனை. இலங்கையில் அதிக எண்ணிக்கையிலான தெருவில் திரியும் விலங்குகள் உள்ளன, அவை பெரும்பாலும் துஷ்பிரயோகம், பட்டினி மற்றும் புறக்கணிப்பை எதிர்கொள்கின்றன. தெருவில் திரியும் விலங்குகளை நிர்வகிக்க அரசாங்கம் கருத்தடை திட்டங்களை செயல்படுத்தியிருந்தாலும், இந்த முயற்சிகள் சீரற்றவை மற்றும் போதுமான நிதி இல்லாமல் உள்ளன.

இலங்கையில் விலங்கு வதையைத் தடுப்பதற்கு தற்போதுள்ள சட்டங்களை அமல்படுத்துவது மிகப்பெரிய தடைகளில் ஒன்றாகும். காவல்துறை மற்றும் வனவிலங்கு அதிகாரிகள் உள்ளிட்ட சட்ட அமலாக்க அதிகாரிகளுக்கு பெரும்பாலும் விலங்கு வதை வழக்குகளைக் கையாள பயிற்சி, வளங்கள் மற்றும் அர்ப்பணிப்பு இல்லை. பல வழக்குகள் பதிவு செய்யப்படாமல் போகின்றன, .

இலங்கையில் ஆர்வலர்கள் மற்றும் விலங்கு நல அமைப்புகள் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க அயராது உழைத்து வருகின்றன. விலங்கு உரிமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், விலங்குகள் மீது இரக்கத்தை ஊக்குவித்தல் மற்றும் சட்ட சீர்திருத்தத்திற்காக பிரச்சாரம் செய்தல் ஆகியவை மாற்றத்தை ஏற்படுத்தும்.

விலங்கு கொடுமையைக் குறைப்பதில் கல்வி மற்றும் விழிப்புணர்வும் முக்கிய பங்கு வகிக்கிறது. பள்ளிகளில் விலங்கு நலக் கல்வியை அறிமுகப்படுத்துதல் மற்றும் விலங்குகள் மீதான பச்சாதாபத்தை ஊக்குவித்தல் ஆகியவை சமூக அணுகுமுறைகளில் நீண்டகால மாற்றங்களுக்கு வழிவகுக்கும்.


தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk

எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

தங்கள் வாழ்க்கை இப்படித்தான் அமைய வேண்டுமென்ற கற்பனையில் வாழ்ந்தவர்கள், காலப்போக்கில் விரக்தியுடன் வாழ்வது ஏன் எனக்கேள்வி எழுக்கின்றது.

சுமுகமான வாழ்விற்குப் பொறுமை, சகிப்புத்தன்மை வேண்டும். மேலும் தங்களது பலவீனம், குறைபாடுகளை உணர்ந்தேயாக வேண்டும்.

நான்தான் சரியான முறையில் இருக்கின்றேன் எனத் தன்னைத்தான் மெச்சினால் அது உண்மையாகுமா? குறைபாடுகள் எதுவென புரிந்து கொள்ளுதல் கூட சிரமம்தான். ஆனால், பெற்றோர், உறவினர் மூலம் சில சந்தேகங்களை கேட்டு அறியவேண்டும். முக்கியமாக நல்ல நண்பர்கள் மூலமாக, தன்னுடைய செயல்களில் தவறுகள் நடக்கின்றதா? என அறிவதில் என்ன வெட்கம்?

சின்னச்சின்ன தெரியாத தவறுகள் மாவெரும் குற்றமல்ல. புதிமதி கூறும் வேண்டப்பட்டவர்கள் மீது பாயக்கூடாது. நீர் யார் என்னைப் பற்றிக் கூறுவது எனும் ஆணவம் வேண்டாம்! திசைமாறி வாழ்ந்த பின்பு துன்பப்படுவது யார்? தவறுகளை ஒத்துக்கொள்க.

பருத்தியூர் பால வைரவநாதன்

## கடிதங்கள்

### ஹட்டன் குப்பையால் பெரும் அவதி

ஹட்டன் டன்பார் நகர பகுதியில் காணப்படும் அடுக்கு மாடி கட்டிட தொகுதியில் கழிவுகள் கொட்டப்படுவது அதிகரித்துள்ளது. இதனால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

ஹட்டன் நகரில் ஆங்காங்கே கொட்டப்படும் கழிவுகளால் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படும் நிலையில், அட்டன் ஹைலண்ட கல்லூரிக்கு அருகில் உள்ள நிறைவு பெறாத அடுக்கு மாடி கட்டிடத்தில் தேவையற்ற சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும் அப் பிரதேசவாசிகள் கழிவுகளை அக்கட்டிடத்தினுள் வீசி விட்டு செல்வதாகவும் துர்நாற்றத்தால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும் பொது மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய ஹட்டன் நகரசபை தலைவர், உப தலைவர் மற்றும் நகர சபை செயலாளர் பொது சுகாதார பரிசோதகர் உள்ளிட்ட குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

எனவே, உரிய கட்டிட உரிமையாளருக்கு திறந்த வெளியில் காணப்படும் கட்டிடத்தை பாதுகாப்பான முறையில் வைக்கக்கோரி நகரசபையினூடாக கடிதம் அனுப்பி வைக்கப்படும் என்றும் அதன் பின்னரும் பாதுப்பாற்ற முறையில் இவ்வாறு அநாவசிய விடயங்கள் இடம்பெறுவதற்கான ஏதுவான வகையில் இக்கட்டிடம் இருக்கும் பட்சத்தில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் விதலத்துக்கு விரைந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் கலைச்செல்வி தெரிவித்துள்ளார்.

இராமசந்திரன்

பொருளாதார நெருக்கடியின் பின்னரான இலங்கை – 35

# டட்லி அரசாங்கத்தின் பொருளாதாரக் கோளாறுகள்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

1965-70 காலகட்டத்தில், முறையான திட்டமிடல் செயல்பாடு எதுவும் இல்லை, பொருளாதாரத் திட்டம் எதுவும் வகுக்கப்படவில்லை. ஏற்றுமதி வருவாயில் ஏற்பட்ட தொடர்ச்சியான வீழ்ச்சி காரணமாக, பொருளாதாரத்தின் நெருக்கடி மேலாண்மை எந்தவொரு நீண்டகால வளர்ச்சி முன்னோக்கையும் விட முன்னுரிமையைப் பெற்றது. எனவே சந்தை மற்றும் தனியார் துறையின் பங்கை அதிகளவில் நம்பியிருந்தது. முந்தைய அனைத்து திட்டங்களும் செயல்படாமல் இருந்ததால், திட்டமிடல் நடைமுறைகள் பெரும்பாலும் மதிப்பிழந்துவிட்டன.

ஆறு ஆண்டு முதலீட்டுத் திட்டம், பத்தாண்டுத் திட்டம் மற்றும் குறுகிய கால நடைமுறைப்படுத்தல் திட்டம் தொடர்பான அனுபவம், திட்டமிடுபவர்களை முறையான திட்டமிடல் பயிற்சிகளின் செயல்திறன் குறித்து சந்தேகிக்க வைத்தது. எனவே, திட்டமிடல் அமைப்பு, 1965-70 காலகட்டத்தில் நீண்ட காலத் திட்டத்தை வகுப்பதில் தனது ஆற்றலை அர்ப்பணிக்காமல், பொருளாதாரத்தை நிர்வகிப்பதில் நேரடியாக ஈடுபடவும், பொருளாதாரத்தை நெருக்கடியிலிருந்து வெளியேற்றுவதற்கான உத்திகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்கவும், பொருளாதாரத்தை வளர்ச்சி சார்ந்த பாதைக்கு நகர்த்துவதற்கான புதிய கொள்கை கட்டமைப்பை வழங்க முயற்சிக்கவும் முடிவு செய்தது.

திட்டமிடல் அமைப்பு அந்நிய செலாவணி பட்ஜெட்டை தனது கட்டுப்பாட்டின் கீழ் எடுத்துக்கொண்டு, அதிக அளவிலான வெளிநாட்டு உதவி, உள்நாட்டு விவசாயத் துறையை ஆதரிக்கும் இறக்குமதிக் கொள்கைகள், கட்டுப்பாடுகளை படிப்படியாக அகற்றுவதற்கும் வளங்களை சிறப்பாக ஒதுக்குவதற்கும் அந்நிய செலாவணி முறையை சீர்திருத்துதல், விலை ஊக்கத்தொகை மற்றும் சந்தை பொறிமுறையை மிகவும் திறம்படப் பயன்படுத்தும் விலை நிர்ணயக் கொள்கைகளின் திருத்தம், சிறந்த திட்ட மதிப்பீடு மற்றும் அரசாங்க முதலீட்டின் தரத்தை மேம்படுத்த மிகவும் திறமையான செயல்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு உத்தியை செயல்படுத்தியது. முறையான திட்டமிடல் நடைமுறையானது குறைந்த அளவிலேயே தொடர்ந்தது.

கடந்த காலத்தில் நாட்டின் திட்டமிடுபவர்கள் பின்பற்றிய திட்டமிடல் முறைதான் திட்டமிடலை இழிவுபடுத்தி, அதை ஒரு சுருக்கமான மற்றும் பயனற்ற பயிற்சியாக மாற்றியது. திட்டமிடல் முன்னுரிமைகள் சமூக-பொருளாதார யதார்த்தங்களுடன் ஒத்துப்போகவில்லை. அபிவிருத்தி என்ற கருத்து, மேற்கத்திய உலகின் நுகர்வு முறைகளை அடைவதை ஒட்டுமொத்த நோக்கமாகக் கொண்டு, முன்னரே தீர்மானிக்கப்பட்ட வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான முற்றிலும் பொருளாதாரக் கருத்தாக இருந்தது. அதை அடைய, திட்டமிடுபவர்கள் மூலதனம் இல்லாததை மிகப்பெரிய தடையாகக் கருதினர். எனவே அவர்களின் மொத்த அக்கறை வெளிநாட்டு உதவி மற்றும் முதலீட்டை ஈர்ப்பதாகும். இந்த உதவி நன்கொடையாளர்களை ஈர்க்க, வெளிநாட்டு வளங்களுக்கான ஒரு சிறப்புத் துறை நிறுவப்பட்டது. ஏற்கனவே விவரிக்கப்பட்டுள்ளபடி, இந்தக் கொள்கையின் விளைவு, நாட்டை கடன் அடிமைத்தன நிலைக்குத் தள்ளுவதாகும். இந்தக் கொலனித்துவ தொந்தரவின் முக்கிய காரணம், மக்களின் நெறிமுறைகளின் அடிப்படையில் ஒரு யதார்த்தமான சமூகக் கொள்கையை வகுக்க அரசாங்கம் தவறியதுதான்.

உணவு உற்பத்தி இயக்கத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக நம்பிய, பிரதமர் டட்லி சேனநாயக்கா, மார்ச் 25, 1970க்குள் பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டியிருந்ததால், பொதுத் தேர்தலுக்கான உத்திகளைத் தயாரிக்கத் தொடங்கினார். விவசாயிகள் தனது விவசாய இயக்கத்திற்கு நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள் என்று நம்பி, மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டத்தைத் தொடங்குவதன் மூலம் அவர்களிடையே தனது ஆதரவைப் பெற முயன்றார். மகாவலி நதியின் மொத்த வளங்கள் ஆறு மில்லியன் ஏக்கர் அடிகள், 654,000 ஏக்கர் புதிய நிலத்திற்கு நீர்ப்பாசனம் செய்யும் திறன் கொண்டவை மற்றும் ஏற்கனவே உள்ள 236,000 ஏக்கர் சாகுபடி நிலத்தில் இரட்டைப் பயிர்ச்செய்கையை சாத்தியமாக்கும் திறன் கொண்டவை. உற்பத்தி செய்யக்கூடிய நீர் மின்சாரம் 508 மெகாவாட் என மதிப்பிடப்பட்டது. திட்டத்தின் மொத்த செலவு ரூ.6,700 மில்லியன் என மதிப்பிடப்பட்டது.

இந்தத் திட்டத்தின் அடிப்படையாக அமைந்த UNDP அறிக்கை 1968 ஆம் ஆண்டு அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும், 1970 மார்ச் 11 ஆம் தேதிதான் அரசாங்கம் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையை நிறுவுவதற்கான மசோதாவை அறிமுகப்படுத்தியது. மார்ச் மாத தொடக்கத்தில் டட்லி சேனநாயக்கா நாடாளுமன்றம் அந்த மாத இறுதியில் கலைக்கப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து இது நடந்தது. இந்தத் திட்டம் மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கான ஒரு காரணமாக இந்த மசோதாவை நிறைவேற்ற அரசாங்கம் முயன்றது. எதிர்க்கட்சிகள் இந்த வெளிப்படையான தேர்தல் பிரச்சாரத்துடன் உடன்படத் தயாராக இல்லை. அதைத் தொடர்ந்து நடந்த நீண்ட பாராளுமன்ற விவாதத்தில், உலக வங்கியுடனான கடன் மற்றும் கடன் ஒப்பந்தத்தில் உள்ள சில பிரிவுகள் நாட்டின் இறையாண்மையைத் தடுப்பதாக அவர்கள் குறிப்பாகத் தாக்கினர். குறிப்பாக, 'திறமையான, அனுபவம் வாய்ந்த மற்றும் உலக வங்கிக்குக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய" நபர்களை மூத்த மேலாளர்களாக நியமிக்கவும், 'உலக வங்கியின் முன் ஒப்புதலைப் பெறவும்" இந்த உட்பிரிவுகள் அரசாங்கத்தை வலியுறுத்தின.

பாராளுமன்றத்தில் நடந்த விவாதம் பெரும் புயலைக் கிளப்பியது, எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தன, எதிர்க்கட்சி இல்லாமல் ஒரே அமர்வில் மசோதா அதன் அனைத்து நிலைகளிலும் நிறைவேற்றப்பட்டது. தேர்தலில் ஐ.தே.க.வை எதிர்த்துப் போராட ஐக்கிய முன்னணியை உருவாக்க ஒன்றிணைந்த ஸ்ரீ.ல.சு.க./ல.ச.ச.க./கம்யூனிஸ்ட் கட்சி, இந்தப் பிரச்சினையை வாய்ப்பாக்கினர். டட்லி சேனநாயக்கா இந்த நூற்றாண்டின் இறுதி வரை நாட்டை உலக வங்கியிடம் அடகு வைத்து மகாவலியைத் திசைதிருப்ப விரும்புவதாகக் குற்றம் சாட்டினர். அது இறுதியில் உண்மையாகிப் போனது.

நாட்டின் பொருளாதார கட்டமைப்பில் தோட்ட விவசாயம் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தாலும், சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து எந்த அரசாங்கமும் ஏற்றுமதி விவசாயத் துறையின் வளர்ச்சிக்கான எந்தவொரு கொள்கையையும் வகுத்ததில்லை. ஏனென்றால், தோட்டங்கள் முக்கியமாக நிறுவனங்களுக்குச் சொந்தமானவை (வெளிநாட்டு மற்றும் உள்ளூர்), உரிமையற்ற மற்றும் பெரும்பாலும் நாடற்ற தொழிலாளர்களால் இயக்கப்பட்டன, எனவே அரசாங்கங்கள் இந்தத் துறையில் மக்கள் மீதான எந்த அழுத்தத்திற்கும் உட்படவில்லை என்று உணர்ந்தன. இந்த அலட்சியம் காரணமாக, தோட்டத் துறை எந்தவொரு அரசாங்கக் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டதாக அல்லாமல், ஒரு தன்னாட்சிப் பகுதியாகத் தொடர்ந்து செயல்பட்டது. பாரம்பரிய ஏற்றுமதிப் பொருட்களுக்கான விலை வீழ்ச்சியின் பிரச்சினை விவசாயப் பிரச்சினையாகக் கருதப்படவில்லை. வற்றாத பயிர்களின் உற்பத்தி மற்றும் மேலாண்மை குறித்து அறிந்த எந்த இயந்திரங்களும் அரசாங்கத்திடம் இல்லை. ஏற்றுமதி விவசாயத்தின் சரிவு மற்றும் சிக்கல்களைக் கண்காணிக்கும் திறன் இல்லாததால், அரசாங்கத்தால் ஒரு கொள்கையை வரைய முடியவில்லை. இதன் விளைவாக, இந்தத் துறை தொடர்ந்து சறுக்கியது. ஏற்றுமதி விலைகளில் நீண்டகால சரிவுக்கு ஒரே பதில் பல்வகைப்படுத்தல் என்பதை அரசாங்கம் கண்டறியத் தவறிவிட்டது. இருப்பினும், 1950களின் பிற்பகுதியில் செயற்கை ரப்பரின் போட்டி காரணமாக ரப்பர் விலைகள் வீழ்ச்சியடையத் தொடங்கியபோது, மலாயா அரசாங்கம் பயிர் பல்வகைப்படுத்தல் கொள்கையை ஏற்றுக்கொண்டது, அதிகம் பயன்தராத ரப்பர் மற்றும் தேங்காய் நிலங்களை எண்ணெய் பனையாக மாற்றியது. இந்த வழியில், மலாயா அதன் முக்கிய ஏற்றுமதி உற்பத்தியில் விலை வீழ்ச்சியின் விளைவுகளைத் தணித்தது மட்டுமல்லாமல், விரிவடைந்து வரும் உலக சந்தையில் நிலையான விலையை நிர்ணயிக்கும் ஒரு புதிய ஏற்றுமதி உற்பத்தியை மாற்றியது. எண்ணெய் பனை இலங்கையின் பொருளாதாரமற்ற ரப்பர் மற்றும் தேங்காய் நிலங்களுக்கு மிகவும் பொருத்தமானது. மேலும், அதிலிருந்து கிடைக்கும் லாபம் குறைந்த அளவில் பயிரிடப்படும் தேயிலை, ரப்பர் அல்லது தேங்காய் ஆகியவற்றை விட மூன்று மடங்கு அதிகம். மேலும், பயனைப் பெறத் தேங்காய்க்கு 14 ஆண்டுகளும் ரப்பர் 7 ஆண்டுகளும் தேவைப்படும். அதே வேளையில், எண்ணெய் பனைகள் அவற்றின் இரண்டாவது ஆண்டில் மகசூல் கொடுக்கத் தொடங்குகின்றன. எண்ணெய் பனை உற்பத்தியில் பன்முகப்படுத்தப்படுவதற்குப் பதிலாக, இலங்கை உண்மையில் பனை எண்ணெயை இறக்குமதி செய்து கொண்டிருந்தது.

# ChatGPT புத்திசாலி நண்பனா ? கல்வி குறுக்கு வழியா?

முரளிதரன் ஷம்பவி,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்




தொழில்நுட்பம்,விஞ்ஞானம் ஆகிய இரண்டும் தற்கால உலகின் இரு கண்கள். இந்நாளில் தொழில்நுட்பம் இன்றி எதுவும் சாத்தியம் இல்லை. காரணம் தொழில்நுட்ப வளர்ச்சியின் அபரிவிதமான வளர்ச்சி. இவற்றுள் தற்கால முக்கிய சக்தியாக வலம் வருவது செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence ). இவ் செயற்கை நுண்ணறிவானது முக்கியமான புரட்சியை உலகளாவிய ரீதியில் ஏற்படுத்தி உள்ளது. AI தொழில்நுட்பமானது மருத்துவம் கல்வி, வணிகம், சுகாதாரம், அரசியல் உட்பட பல துறைகளில் அதிரடியாக முன்னேறி வருகின்றது. அந்த வகையில் 21 ஆம் நூற்றாண்டின் கல்விச் சூழல் தொழில்நுட்ப வளர்ச்சியால் முழுமையாக மாறி வருகின்றது என்றால் மிகை ஆகாது. இதில் Open AI நிறுவனத்தின் ChatGPT போன்ற பெரிய மொழி மாதிரிகள் (Large language models ). கல்வியில் புதிய முன்னேற்றங்களை ஏற்படுத்திக் கொண்டு வருகின்றன. இன்று பல்கலைக்கழக மாணவர்களின் கதாநாயகனாக ChatGPT மாறி உள்ளது என்றால் பிழையில்லை. பல்கலைக்கழக மாணவர்கள் குறிப்பாக இதனை பயன்படுத்தி தகவல் தேடல்,கட்டுரை,எழுதுதல் நிரலாக்கு உதவி, கோட்பாடுகளின் விளக்கம், மொழிபெயர்ப்பு,தேர்வு தயாரிப்பு,வினாக்களுக்கு விடைகளை பெற்றுக் கொள்ளுதல் என பன்முகத்திலான தேவைகளை பூர்த்தி செய்து கொள்கின்றனர். ChatGPT ஓர் சக்தி வாய்ந்த உதிரி கருவி ( Supportive tool)மட்டுமே. அது மாணவர்களின் அறிவு பயணத்திற்கு துணை தரும் ஓர் சிந்தனை உடனான கருவியாக இருக்கும் அதே வேளை எதிர்மறையான பக்கங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

ChatGPT உதிர் கருவியின் சாதக விடயங்களை உள்ளடக்கிய பக்கங்களை புரட்டிப் பார்த்தோமானால் அதன் முக்கிய நன்மைகளாக பின்வரும் விடயங்கள் அமைகின்றன.

### I. அறிவு பெற விரைவான வழி மற்றும் நேர வழிகாட்டி

* மாணவர்கள் நேரம் குறைவாக இருக்கும்போது ஒரு தலைப்பினையோ அல்லது ஒரு கட்டுரையோ சுருக்கமாக புரிந்து கொள்ள வேண்டுமானால் ChatGPT ஒரு விரைவான எளிதான வழியை தரும். இதன் மூலம் மாணவர்கள் ஒரு விடயத்தை எளிமையாக புரிந்து கொள்ளவும், நேரத்தை மீதப்படுத்தவும் ஏதுவாக அமையும் இது ஒரு சாதாரண சம்பவம் அல்ல ஒரு புதிய கல்வி யுத்தியின் அறிகுறி

> வளர்ச்சி என்பது ஒரு மனிதனின் உடல் மட்டுமல்ல சிந்தனையும் சேர்ந்து வளர வேண்டும் அப்பொழுதுதான் அவன் ஒரு முழுமையான மனிதன் ஆகிறான் ஆனால் தற்போது மாணவர்கள் ஒரு விடயம் தொடர்பாக சிந்திப்பதில் முழுவதுமாகAI யினை நம்புவதால்

உதாரணமாக "Theory of multiple intelligences"-5 வரிகளில்.

### 2. எழுத்துத் திறனுக்கு ஆதரவு.

* மொழிப் பிழைகள், வாக்கிய அமைப்புகள், நடைமுறை எழுத்துமுறைகள் போன்றன ChatGPT மூலம் மாற்றி சிறப்பிக்க முடிகிறது. குறிப்பாக ஆங்கிலத்தில் எழுத கடினப்படும் மாணவர்களுக்கு இது தன்னம்பிக்கையை அளிக்கின்றது.

### 3. ஆய்வுப் பணிகளுக்கான வழிகாட்டி.

* ChatGPT ஆனது கட்டுரை வடிவமைப்பில் தலைப்பு கூறுகள் அமைத்தல், உள்ளடக்கத்திற்கான முன்னோட்டங்களுக்கான விளக்கங்களை தருதல், Assignment செய்தல் போன்றவற்றிற்கு உதவுவதால் ஆரம்பத்தில் ஒரு குறிப்பிட்ட ஆய்வு விடயம் பற்றி தெரியாமல் தடுமாறும் மாணவர்களுக்கான சிறப்பான வழிகாட்டியாக அமைகின்றது. இது பின்னாளில் மாணவர்களின் திறமையை மேம்படுத்துவதற்கும் அடித்தளமாக அமைகிறது.

### 4. திறன் வளர்ச்சிக்கு உதவுதல்.

* நிரலாக்கம் (Programing ), கணிதம்,தரவியல்,புள்ளிவிபரவியல் போன்ற பாடங்களுக்கும் உதவுதல். குறிப்பாக Code debugging விளக்கங்கள் அளிப்பதால் மாணவர்கள் அது சார் விடயங்களை இலகுவாகவும் தெளிவாகவும் கற்றுக் கொள்கிறார்கள்.

### 5. குழப்பம் தெளிக்க ஒரு தோழன்.

* ஒரு சில மாணவர்கள் விரிவுரையாளர்களிடம் மீண்டும் மீண்டும் விளக்கம் கேட்க தயங்குவார்கள் அல்லது பயப்படுவார்கள் ஆனால் ChatGPT போன்ற ஒரு bot மாணவர்கள் பயமின்றி தயக்கம் இன்றி தேடல்களை மேற்கொள்வதற்கு உறுதுணையாக அமைகின்றது.

ChatGPT யானது ஒரு கருவி , அந்த கருவி தரும் விடயங்கள் அனைத்தும் ஒரு கருவி அமைப்பிலேயே இருக்கும் அதன் அமைப்பினை மனிதர்கள் எழுதுவது போல மாற்றி அமைத்தல், ஒரு விடயத்தை ஒரு பத்து வயது குழந்தைக்கு விளக்குவது போல மாற்றி அமைப்பதற்குமான வசதி, ஒரு பெரிய பந்தியை சிறிய சிறியதாக மாற்றி எளிமையாக தருவதற்கான வசதிகள் இருப்பதனால் மாணவர்கள் அதன் உதவியை மென்மேலும் நாடி நிற்கின்றனர்.

உதாரணமாக /human கருதி அமைப்பில் இருக்கும் ஒரு கட்டுரையை மனிதர்களின் கட்டுரை போல மாற்றி அமைத்தல்.

ELI 10 விளக்கமாக இருக்கும் ஒரு விடயத்தை 10 வயது குழந்தைகளுக்கு விளங்கப்படுத்துவது போல மாற்றி அமைத்தல்.

LISTIFY அண்ணிய அமைப்பில் இருக்கும் விடயங்களை சிறிது சிறிதாக உடைத்து தருதல்.

> ChatGPT ஓர் சக்தி வாய்ந்த உதிரி கருவி [ Supportive tool] மட்டுமே. அது மாணவர்களின் அறிவு பயணத்திற்கு துணை தரும் ஓர் சிந்தனை உடனான கருவியாக இருக்கும்

மறுபக்கம்: தோழன் தவறான வழிகாட்டியாக மாறும் சந்தர்ப்பம்.

ChatGPT எழுதும் பதில் உங்களுடையதா? உங்கள் அறிவின் வெளிப்பாடா?

நேர்மையான கல்வி முறைக்கு சவால்.

இதன் மூலம் பெறப்படும் பதில்களை எதுவித மாற்றம் செய்யாமல் நேரடியாக பயன்படுத்துவது கல்விசார் நேர்மையை (Academic integrity ) பாதிக்கக் கூடியது இது ஒரு வகையில் Plagiarism ஆகலாம். இதன் மூலம் உண்மையான திறமைகள் கேள்விக்கு உட்படுத்தப்படும்.

### சிந்தனைத் திறன் முடக்கப்படுதல்.

வளர்ச்சி என்பது ஒரு மனிதனின் உடல் மட்டுமல்ல சிந்தனையும் சேர்ந்து வளர வேண்டும் அப்பொழுதுதான் அவன் ஒரு முழுமையான மனிதன் ஆகிறான் ஆனால் தற்போது மாணவர்கள் ஒரு விடயம் தொடர்பாக சிந்திப்பதில் முழுவதுமாகAI யினை நம்புவதால் ஒருவரின் ஆழ்ந்த அறிவு மனப்பான்மையை தளர்த்தும். தன்மையானது அவரின் அறிகை ரீதியான பிரச்சனைக்கு ஏதுவாக அமையும்.

உதாரணமாக பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் Assignment முழுவதுமாக ChatGPT மூலமே செய்தல் அத்துடன் நின்று விடாமல் மாணவர்கள் Reference கூட ChatGPT இடம் இருந்து தான் பெற்றுக்கொள்ளல்.

### தன்னம்பிக்கை குறைதல்.

எல்லாவற்றிற்கும் AI உதவியை பெறுபவர்கள் தம் சிந்தனையை சந்தேகிக்க வாய்ப்புண்டு "ChatGPT இன்றி நான் இல்லை" என்ற உணர்வு அவர்களிடம் ஆழமாக பதிவதனால் தங்களிடம் முழுமையான திறமை இருப்பினும் அதனை பயன்படுத்த தயங்குகிறார்கள்.

மனித உறவுகளுக்கான இடையூறு ஏற்படுத்தல்.

ஆரம்ப காலங்களில் ஏதேனும் கட்டுரை எழுதுதல் அல்லது கதை எழுதுதல் அல்லது ஆய்வு விடயம் குறித்து மாணவர்கள் விரிவுரையாளர்களை நேரில் சென்று தொடர்பினை ஏற்படுத்தி அவர்களின் அறிவு அது சார்பு விடயங்களையும் பெற்றுக் கொள்வர்.ஆனால் இப்போது ChatGPT என்றால் போதும் என்ற மனப்பாங்கு மனித உறவுகளை துண்டித்து விடுகிறது.

### புத்தகங்களுக்கு மதிப்பற்ற தன்மை.

தற்போதைய காலங்களில் தொழில்நுட்ப வளர்ச்சியால் புத்தகங்களின் மதிப்பு என்பது வீழ்ச்சி அடைந்து கொண்டே வருகின்றது அதிலும் குறிப்பாக மாணவர்கள் இந்த AI யை நம்புவதால் நூலகங்களுக்கு சென்று புத்தகங்கள் வாசிக்கும் பழக்கங்களையும் முற்றுமுழுதாக கைவிட்டு விட்டனர்.

ChatGPT ஓர் மெய்நிகர் ஆசிரியராக இருக்கலாம் ஆனால் அது மனசாட்சியாக இருக்க இயலாது. இந்தAI முறையானது எமது கல்வி பயணத்தில் ஒரு வழித்துணையாக இருக்கலாம் ஆனால் அது எமக்கு பதிலாக கல்வி பயணத்தை முன்னெடுத்து செல்ல முடியாது. இன்றைய தொழில்நுட்ப உலகில் ChatGPT ஓர் புதிய நண்பன் என்றால் மாணவர்கள் அதன் மீது முழுமையான சார்பை வளர்த்து விடக் கூடாது அதை உணர்வும்,நெறிமுறையும்(Usage ethic ) கொண்டு அணுக வேண்டும்.

### சமநிலை திட்டம் ChatGPT+ சிந்தனை= உண்மையான கல்வி

ஒரு பல்கலைக்கழக மாணவியாக நான் உணர்வது ChatGPT பற்றி எமது வேலைகளை இலகுபடுத்துவதுடன் நாம் புதிய தகவல்களை பெற்றுக் கொள்வதற்கும் மற்றவர்களிடமிருந்து தனித்துவமான விடயங்களை வளர்த்துக் கொள்வதற்கும் உதவுவதுடன் அதனை நாம் பயன்படுத்துவது தவிர்க்க முடியாத ஒரு விடயம்.இருப்பினும் அதிலிருந்து பெறும் பதில்களை நாம் சரியாக விளங்கிக் கொண்டு எமது சொந்த வார்த்தையை பயன்படுத்தி எழுதுவதுடன் எமது சொந்த குரலையும் உருவாக்கினால் ChatGPT எமக்கு ஓர் சிறந்த நண்பனாகவும் ஒரு சிறந்த வழிகாட்டியாகவும் அமையும்.

---

நாட்டின் இரண்டாவது பெறுமதி வாய்ந்த

## வர்த்தக நாமம் கொமர்ஷல் வங்கி



பிராண்ட் ஃபினான்ஸ் (Brand Finance), 2025 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் அனைத்து துறைகளிலும் கொமர்ஷல் வங்கியை இரண்டாவது மதிப்புமிக்க வர்த்தக நாமமாகவும், நாட்டின் மதிப்புமிக்க தனியார் துறை வங்கி வர்த்தக நாமமாகவும் தரவரிசைப்படுத்தியுள்ளது.

இலங்கையின் 100 மிகவும் பெறுமதி மிக்க மற்றும் வலுவான வார்த்தக நாமங்கள் தொடர்பான பிராண்ட் ஃபினான்ஸின் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மதிப்பாய்வின்படி, கொமர்ஷல் வங்கிக்கு ரூ. 46.6 பில்லியன் வர்த்தக நாம பெறுமதியானது ஒதுக்கப்பட்டுள்ளது - இது தனியார் வங்கித் துறையில் மிக உயர்ந்ததாகவும் மற்றும் நாட்டின் அனைத்து வர்த்தக நாமங்களிலும் இரண்டாவது அதிகபட்சமானதாகவும் விளங்குகிறது.

வர்த்தகநாம வலிமையைப் பொறுத்தவரை, வங்கியானது 100க்கு 86.3 வர்த்தகநாம உறுதி சுட்டெண் (BSI) மதிப்பெண்ணுடன் இலங்கையின் மூன்றாவது வலுவான வர்த்தகநாமமாகவும் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. பிராண்ட் ஃபினான்ஸ், கொமர்ஷல் வங்கிக்கு மதிப்புமிக்க AAA வர்த்தகநாம உறுதி மதிப்பீட்டை வழங்கியுள்ளது, இது வங்கியின் வலுவான வர்த்தகநாம சமப்பங்கு மற்றும் அதன் எதிர்கால பெறுமதியை உருவாக்கும் திறனை பிரதிபலிக்கிறது.

பிராண்ட் ஃபினான்ஸின் 2025 தரவரிசையில் வங்கியின் அண்மைய விருதுகள் தொடர்பாக கருத்து தெரிவித்த கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க, 'இந்த அங்கீகாரமானது நாம் ஏற்றுக்கொள்ளும் மூலோபாய வர்த்தகநாம கட்டுமான செயல்முறைக்கும், எமது செயல்பாடுகளின் ஒவ்வொரு பரிமாணத்திலும் தொடர்ந்து சிறந்து விளங்குவதற்கும் ஒரு சான்றாகும். கொமர்ஷல் வங்கி, நிதி வலிமையை மட்டுமல்லாது, மீள்தன்மை, நம்பிக்கை மற்றும் புதுமையையும் குறிக்கும் வகையில் வளர்ச்சியடைந்துள்ளது. அதிகரித்த வர்த்தகநாம பெறுமதியானது, கடின உழைப்பாளிகளான ஊழியர்களால் பல ஆண்டுகளாக கட்டமைக்கப்பட்ட சமத்துவத்தின் அளவைப் பறைசாற்றுகிறது, மேலும் இந்த தரவரிசையானது எமது முழு குழுவினதும் அர்ப்பணிப்பு மற்றும் செயல்திறனுக்கு ஒரு அங்கீகாரமாகும். அவர்களின் அர்ப்பணிப்பானது எமது வர்த்தகநாமத்தின் பெறுமதியை தினமும் அதிகரித்து வருகிறது.'

2025 தரவரிசைப்படுத்தலானது கொழும்பு மற்றும் கம்பஹாவிலிருந்து பெறப்பட்ட வாடிக்கையாளர் ஆய்வு மாதிரியை அடிப்படையாகக் கொண்டதாகும்.

---

## யூனியன் வங்கி கௌரவிப்பைப் பெற்றது

யூனியன் வங்கி, தலைமைத்துவத்தில் பெண்களை கொண்டுள்ளமைக்காக Satyn பெண்களுக்கு நட்பான பணியிட விருதுகள் 2025 நிகழ்வில் விசேட விருதைப் பெற்றுக் கொண்டது. வங்கியின் மொத்த பணியாளர் குழுவில் 50% அதிகமான பெண்கள் பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ள நிலையில், இந்த கௌரவிப்பினூடாக யூனியன் வங்கி பேணும் பெண்களுக்கான சமத்துவம் மற்றும் வலுவூட்டல் செயற்பாடுகள் மீள உறுதி செய்யப்பட்டுள்ளன.

படம் - யூனியன் வங்கி சந்தைப்படுத்தல் உப தலைவர் திஷானி திசாநாயக்க, Satyn சஞ்சிகையின் ஸ்தாபகர் மற்றும் முகாமைத்துவ ஆசிரியர் நயோமினி வீரசூரிய, மக்கள் வங்கி பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் க்ளைவ் பொன்சேகா, யூனியன் வங்கி மனித வளங்கள் பிரதம முகாமையாளர் தேவானி கோனாரா, யூனியன் வங்கி சந்தைப்படுத்தல் முகாமையாளர் நிலுஷா வனசிங்க ஆகியோர் காணப்படுகின்றனர்.



ஜெனீவா

# ஐரோப்பிய நாடுகள் ஈரானுக்கு எச்சரிக்கை

அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக தொடர்ந்து முரண்டு பிடிக்கும் ஈரானுக்கு, ஐரோப்பிய நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேற்கு ஆசிய நாடான ஈரானை, அணு ஆயுத தயாரிப்பில் இருந்து தடுக்க, 2015இல் அணுசக்தி ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இதை அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகள் இணைந்து தயாரித்தன. இந்த ஒப்பந்தத்தில் ஈரான் கையெழுத்திட்டதால், அந்நாட்டின் மீதான ஐ.நாவின் பல தடைகள் நீக்கப்பட்டன.

இந்த ஒப்பந்தத்தில் இருந்து, அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த டொனால்ட் ட்ரம்ப், 2018இல் வெளியேறினார். இதையடுத்து, ஈரான், யுரேனியத்தை அணு ஆயுத தரத்திற்கு செறிவூட்டும் பணியில் இறங்கியது. இது தங்கள் நாட்டுக்கு அச்சுறுத்தல் என்று கூறி, ஈரான் மீது கடந்த ஜூனில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இந்த மோதல் 12 நாட்கள் நீடித்தது.

இஸ்ரேலுக்கு ஆதரவாக, அமெரிக்காவும் ஈரானின் அணுசக்தி வளாகங்கள் மீது குண்டுகளை வீசியது. அணுசக்தி வளாகங்கள் சேதமடைந்ததாக கூறி, சண்டையை நிறுத்த அமெரிக்கா அழைப்பு விடுத்தது.

அதை ஏற்று, இஸ்ரேல் மற்றும் ஈரான் மோதலை நிறுத்திக் கொண்டன.

தற்போது ஈரானுடன் மீண்டும் அணுசக்தி ஒப்பந்தத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸ், ஜேர்மனி, பிரிட்டன் ஆகியவை, ஐரோப்பிய நாடான சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் புதன்கிழமை (27) அன்று பேச்சு நடத்தின.

அதில், ஈரான் சர்வதேச அணுசக்தி முகமையின் அதிகாரிகளை தங்கள் நாட்டின் அணுசக்தி



வளாகங்களுக்குள் அனுமதிக்க வேண்டும், 60 சதவீத தரத்தில் செறிவூட்டி வைத்துள்ள 400 கிலோ யுரேனியத்தை வேறு நாட்டுக்கு மாற்ற வேண்டும், அணு ஆயுதம் தயாரிக்கக் கூடாது போன்ற நிபந்தனைகள் முன் வைக்கப்பட்டன.

ஆனால், அது எதையும் ஈரான் ஏற்கவில்லை. இதனால் பேச்சு இழுபறியில் முடிந்தது. இதனால், மூன்று ஐரோப்பிய நாடுகளும் 2015க்கு முன், ஐ.நா., விதித்த பொருளாதார தடைகளை மீண்டும் அமல்படுத்தும் பணிகளை துவக்குவோம் என எச்சரித்துள்ளன. ஈரானுடனான சர்வதேச நாடுகளின் அணுசக்தி ஒப்பந்தத்தில் 'ஸ்னாப்பேக்' செயல்முறை என்ற ஒன்று உள்ளது. இதன்படி ஈரான் ஒப்பந்தத்தை மீறியதாக, அதை உருவாக்கிய ஐந்து நாடுகளில் ஏதேனும் ஒன்று கருதினால், இந்த செயல்முறையை கொண்டு வரலாம்.

இது ஐ.நாவின் 2015க்கு முந்தைய பொருளாதாரத் தடைகளை அமுல்படுத்த அனுமதிக்கும். ஆனால், இந்த தீர்மானம், வரும் ஒக்டோபர் 18இல் காலாவதி ஆகிறது. அதற்குள் ஈரானை வழிக்கு கொண்டு வர ஐரோப்பிய நாடுகள் அழுத்தம் தருகின்றன.

கலிபோர்னியா

AI தொழில்நுட்பத்தால்

# வேலை இழக்கும் இளைஞர்கள்



நாளுக்கு நாள் AI வளர்ச்சியடைந்து வரும் நிலையில், உலகம் முழுவதும் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள் வெகுவாக குறைந்து விட்டதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது.

உலகம் முழுவதிலும் AI பயன்பாடு அதிகரித்துள்ள நிலையில், வணிகம், தொழில்நுட்பம், கல்வி என பல துறைகளிலும் AI ஆட்டோமேஷன் நடவடிக்கை அதிகரித்துள்ளது.

இதனால் தினம் தினம் ஐடி நிறுவனங்களில் வேலையிழப்புகள் செய்தியாக வந்துக் கொண்டே இருக்கிறது. இது ஐடி துறை மட்டுமல்லாமல் மீடியா, பொழுதுபோக்கு துறைகளிலும் பெரும் அபாயத்தை உருவாக்கியுள்ளது.

இந்நிலையில், ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழகம் சமீபத்தில் நடத்திய ஆய்வில் AI தொழில்நுட்பத்தின் பயன்பாடு அதிகரித்துள்ள துறைகளில் 22-25 வயது இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள் 13 சதவீதம் வரை குறைந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

மென்பொருள் துறையில் மட்டும் 2022ஆம் ஆண்டு முதலாக தொடக்க நிலை ஊழியர்களுக்கான வேலைவாய்ப்புகள் 20 சதவீதம் குறைந்துள்ளது. இந்த தொடக்க நிலை வேலைகள் பெரும்பாலும் கல்லூரி முடித்த இளைஞர்கள் வந்தமரும் பணி என்ற வகையில் எதிர்காலத்தில் வேலையில்லா இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என கணிக்கப்படுகிறது.

நியூயோர்க்

அமெரிக்காவுக்கான

# அஞ்சல் சேவையை

நிறுத்திய 25 நாடுகள்

புதிய வரி குறித்து எந்தத் தகவலையும் தெரிவிக்காததால், அமெரிக்காவுக்கான அஞ்சல் சேவையை 25 நாடுகள் நிறுத்தியுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தன் நாட்டுடன் வர்த்தக பற்றாக்குறையை கடைபிடிக்கும் நாடுகளுக்கு 50 சதவீதம் வரை வரி விதித்துள்ளார். இதற்கிடையே அமெரிக்காவுக்கு வரும், 800 டொலர்களுக்கு உட்பட்ட சிறிய பொதிகளுக்கு வரி விலக்கு இருந்தது.

அந்த வரி விலக்கு நாளை முதல் இரத்து செய்யப் படுகிறது என ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

ஆனால், எவ்வளவு வரி என்பதை வெளியிடவில்லை. வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக நாடு களுக்கு விதித்துள்ள அதே அளவுக்கு, பொதிகளுக்கும் வரி விதிக்கப்படலாம் என கூறப்படுகிறது.

இது பற்றி தெளிவான வழிகாட்டுதல்களை அமெரிக்கா வெளியிடவில்லை. மேலும், பொதிகளுக்கான வரி எப்படி வசூலிக்கப்படும் என்பதிலும் தெளிவில்லை. இதன் காரணமாக இந்தியா, பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மனி, இத்தாலி,




ஆஸ்திரேலியா, ஜப்பான் உட்பட 25 நாடுகள் அமெரிக்காவுக்கான அஞ்சல் சேவையை நிறுத்தியுள்ளதாக, ஐ.நாவின் சர்வதேச தபால் யூனியன் கூறியுள்ளது.

அதேசமயம், 100 டொலருக்கு குறைவான மதிப்புடைய பரிசு பொருட்கள் அனுப்ப அமெரிக்கா வரி விதிப்பதில்லை. எனவே, அந்த சேவை மட்டும் தொடருகிறது.

சென்னை

# செல்:.பி உயிரிழப்பு: இந்தியா முதலிடம்

உலக அளவில் செல்ஃபி உயிரிழப்புகள் இந்தியாவிலேயே அதிகம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க தனியார் நிறுவனம் ஒன்று ஆய்வு மேற்கொண்ட ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக அளவில் கடந்த 2014 மார்ச் முதல் 2025 மே மாதம் வரையில் ஏற்பட்ட செல்ஃபி உயிரிழப்பு தரவுகளை அடிப்படையாக கொண்டு 'தி பார்பர் லா ஃபிர்ம்' என்ற நிறுவனம் இந்த ஆய்வை நடத்தியுள்ளது.

அதன்படி, இந்த குறிப்பிட்ட காலகட்டத்தில் இந்தியாவில் மட்டும் சுமார் 271 விபத்துகள் செல்ஃபி எடுக்கும்போது ஏற்பட்டுள்ளது. அதில், 214 பேர் உயிரிழந்துள்ளனர். 57 பேர் காயமடைந்துள்ளனர். ஒட்டுமொத்தமாக இந்த காலகட்டத்தில் செல்ஃபி மோகத்தால் ஏற்பட்ட வியாபிரீதங்களில் 42.1% இந்தியாவில் நடந்துள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

மக்கள் கூட்டம் அதிகம் நிறைந்த பகுதி, ரயில் பாதை அல்லது மலை உச்சி, உயரமான கட்டிடம் என ஆபத்து நிறைந்த இடங்கள், இந்தியாவில் நிலவும் சமூக வலைதள




மோகம் உள்ளிட்டவை இதற்கு காரணம் என ஆய்வை மேற்கொண்ட வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவுக்கு அடுத்தபடியாக அமெரிக்காவில் 37, ரஷ்யாவில் 19, பாக்சிதானில் 16, ஆஸ்திரேலியாவில் 13 என செல்ஃபி எடுக்கும்போது உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாக தகவல்.

பொதுநலன் கருதியோ அல்லது பாதுகாப்பு கருதியோ அரசு பல இடங்களில் போட்டோ எடுக்கத் தடை விதித்துள்ளது.




இன்று ஆரம்பிக்கிறது ஒருநாள் தொடர்:

# இலங்கையை வீழ்த்துமா சிம்பாப்வே?

சிம்பாப்வே, இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரானது ஹராரேயில் இன்று பிற்பகல் 1 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கிறது.

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் அண்மைய காலங்களில் இலங்கை சிறப்பாகச் செயற்பட்டு வருகின்ற நிலையில், மோசமான பெறுபேறுகளை அண்மைய காலங்களில் கொண்டுள்ள சிம்பாப்வே எவ்வாறு சமாளிக்கப் போகின்றதென்பது சிக்கலானதாகவே காணப்படுகின்றது.

பிரெண்டன் டெய்லரின் மீள்வருகை சிம்பாப்வேக்கு பலம் சேர்த்தாலும் அவர், அணித்தலைவர் கிறேய்க் எர்வின், ஷோன் வில்லியம்ஸ், சிகண்டர் ராசா ஆகியோரிடமிருந்து பெரிய இனிங்ஸ்கள் கிடைக்கப் பெற்றாலே இலங்கைக்கு சிம்பாப்வே பிளஸிங்க் முஸர்பனி, காயத்திலிருந்து மீளத் திரும்பிய றிச்சர்ட் நகரவா மூலம் அழுத்தத்தைக் கொடுக்க முடியும்.

மறுப்பக்கமாக தொடர்ச்சியாக உள்ளூர்ப் போட்டிகளில் ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் குழாமில் வாய்ப்புப் பெற்றுள்ள நுவனிடு பெர்ணாண்டோ, பவன் ரத்னாயக்க ஆகியோரை பரிசோதிப்பதற்கான சிறந்த களமாக இத்தொடர் காணப்படுகிறது. தவிர குழாமுக்குத் திரும்பியுள்ள சதீர சமரவிக்கிரமவும் தொடர்ச்சியான பெறுபேறுகளை வெளிப்படுத்த வேண்டியுள்ளார்.

# முத்தரப்புத் தொடர் இன்று ஆரம்பிக்கிறது




ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், ஐக்கிய அரபு அமீரகம் பங்கேற்கும் முத்தரப்பு இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரானது, ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷாஜாவில் இரவு 8 மணிக்கு நடைபெற்றவுள்ள ஆப்கானிஸ்தான், பாகிஸ்தானுக்கிடையிலான முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கவுள்ளது.

ஆசியக் கிண்ணத் தொடருக்கு முன்னதாக தங்களது அணிகளை இறுதி செய்து கொள்ள மற்றும் பரிசோதிக்க இத்தொடர் சிறந்த வாய்ப்பாக அமைகின்றது.

ஆப்கானிஸ்தானின் அணித்தலைவர் ரஷீட் கான் போர்முக்குத் திரும்ப வேண்டியுள்ளதுடன், இப்ராஹிம் ஸட்ரானும் தன்னை இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டிகளில் நிரூபித்துக் காட்ட வேண்டியுள்ளார்.

மறுபக்கமாக பக்கர் ஸமனின் மீள்வருகையானது பாகிஸ்தானுக்கு பலத்தையளிப்பதுடன் அவருடன் இணைந்து குஷ்டில் ஷா ஆகியோர் தாக்கம் செலுத்தக்கூடிய இனிங்ஸ்களை ஆட வேண்டியுள்ளது.



# சிற்றியிலேயே தொடரும் சவின்ஹோ

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் முன்களவீரரான சவின்ஹோவை இப்பருவகாலத்தில் விடுவிக்கும் எந்த நோக்கமுமில்லையென இன்னொரு பிறீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பருக்கு சிற்றி புதன்கிழமை (27) அறிவித்துள்ளது.

டொட்டென்ஹாமானது 21 வயதான சவின்ஹோவை கைச்சாத்திட முயன்றிருந்தது.

ஸ்பானிய லா லிகா கழகமான ஜிரோனாவிலிருந்து கடந்த பருவகாலத்தில் சிற்றியில் இணைந்த சவின்ஹோ 48 போட்டிகளில் விளையாடி மூன்று கோல்களைப் பெற்று சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்தியிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 29, ஒகஸ்ட் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.